48.

க் ச் ட் த் ப் ற்
வல்லினம்
ங் ஞ் ண் ந் ம் ன்
மெல்லினம்
ய் ர் ல் வ் ழ் ள்
இடையினம்

30 NOV 1954
MADRAS

# தமிழ் இலக்கணம்

485
4-54

நான்காவது—ஐந்தாவது வகுப்புகளுக்கு

த. சே. உமாபதி, M.A., L.T.

TB
P31(4)
N54.
133179.

...ன் பப்ளிஷிங் ஹௌஸ் சென்னை-1

# தமிழ் இலக்கணம்

(நான்காம்-ஐந்தாம் வகுப்புகளுக்கு)

புதிய பாடதிட்டப்படி எழுதப்பட்டது.

ஆசிரியர் :

த. சே. உமாபதி, M,A.,L.T.

சி. அப்துல் அகீம் ஹிந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி

சென்னை–1.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை–1.

பதிப்புரிமை] 1954 [விலை 5 அணா

முதற்பதிப்பு — 1954

Printed at the Venkatesan Press, Madras—1.

# முன்னுரை

இச்சிறு இலக்கண நூல் ஆரம்பப் பள்ளிகளில் **நான்காவது, ஐந்தாவது** வகுப்புக்களிற் பயிலும் சிறுவர், சிறுமியர்க்கென எழுதப்பட்டுளது. இதில் ஒவ்வொரு வகுப்புக்கும் உரிய இலக்கண பாடங்கள் தனித்தனியே தரப்பட்டுள்ளன. இதில் உதாரணங்களைக் கொடுத்து அவற்றினின்று விதிகளை நிர்ணயிப்பதான அநுமான முறையே கையாளப்பட்டுளது. உதாரணங்களும், விளக்கங்களும் மிக எளிய நடையில் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் தரப்பட்டுள்ள பயிற்சிகள் நற்பயனை நல்கும் என்பது ஒருதலை. இது சிறுவர், சிறுமியர்க்கு வேம்பெனக் கசக்கும் இலக்கணத்தைக் கரும்பென இனிக்குமாறு செய்யும் என்பது எனது நம்பிக்கை.

14–11–'54 }
சென்னை : }

ஆசிரியர்.

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|

## நான்காம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| 1. | வாக்கியம் | ... | 1 |
| 2. | சொல் | ... | 2 |
| 3. | எழுத்து | ... | 3 |
| 4. | சொல் | ... | 14 |
| | (1) பெயர்ச் சொல் | ... | 15 |
| | (2) வினைச் சொல் | ... | 17 |
| 5. | சொற்றொடர் | ... | 19 |
| 6. | நிறுத்தல் குறிகள் | ... | 23 |

## ஐந்தாம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| 1. | எழுத்து | ... | 26 |
| 2. | எழுத்தின் வடிவம் | ... | 27 |
| 3. | உயிர் எழுத்து | ... | 28 |
| 4. | மெய்யெழுத்து | ... | 29 |
| 5. | சொல் | ... | 32 |
| 6. | பெயர்ச் சொல் | ... | 33 |
| 7. | வினைச் சொல் | ... | 44 |
| 8. | இடைச் சொல் | ... | 49 |
| 9. | உரிச் சொல் | ... | 52 |
| 10. | வாக்கியம் | ... | 54 |
| 11. | நிறுத்தல் குறிகள் | ... | 56 |

(நான்காவது - ஐந்தாவது வகுப்புகளுக்கு)

---

# 1. வாக்கியம்

குழந்தாய், உனது எண்ணத்தைப் பிறர்க்கு எப்படித் தெரிவிக்கிறாய்? சொற்களால் தெரிவிக்கிறாய் அல்லவா? இச்சொற்களின் கூட்டத்திற்கு இலக்கணத்தில் **வாக்கியம்** என்பது பெயர்.

**கீழ்வரும் சொற்கூட்டங்களைப் படி :**

1. **முருகன் பையன் அழகிய**
2. **முருகன் அழகிய**
3. **முருகன் அழகிய பையன்.**

முதல் கூட்டத்தில் மூன்று சொற்கள் உள்ளன. அவை எவ்வகைக் கருத்தையும் விளக்கவில்லை. இரண்டாவது கூட்டத்தில் இரண்டு சொற்கள் இருக்கின்றன. அவை ஒரு கருத்தைத் தெரிவிக்கின்றன. ஆனால், அக்கருத்து முடியவில்லை. மூன்றாவது கூட்டத்தைக் கவனி. அதில் முதல் கூட்டத்தில் உள்ள சொற்களே இருக்கின்றன. ஆனால் அவை

ஒரு முடிந்த கருத்தைத் தெரிவிக்கின்றன. காரணம் என்ன? அச் சொற்கள் பொருள் தரும் முறையில் அமைந்து இருக்கின்றன. இவ் வாறு ஒரு முடிந்த கருத்தைத் தெரிவிக்கும் சொற்களின் கூட்டமே **வாக்கியம்** எனப்படும்.

**மனப்பாடம் செய் :**

**சொற்கள் ஒன்றை ஒன்று தொடர்ந்து நின்று, ஒரு முடிந்த கருத்தைத் தெரிவிப்பது வாக்கியம்.**

## 2. சொல்

வாக்கியம் அமைக்கச் சொற்கள் தேவை என்பதை அறிந்தாய் அல்லவா? அச்சொற் கள் எவ்வாறு உண்டாகின்றன என்பதைக் கவனி.

**கீழ்வரும் எழுத்துக் கூட்டங்களைப் படி :**

| | | | |
|---|---|---|---|
| 1. | டுமா | துகா | ண்க |
| 2. | குரைதி | க்குமூ | டிண்வ |

முதல் வரிசையில் உள்ள எழுத்துக் கூட் டங்கள் மூன்றையும் கவனி. ஒவ்வொன்றிலும் இரண்டு எழுத்துக்கள் உள்ளன. ஆனால், அவை எந்தப் பொருளையும் தெரிவிக்கவில்லை. இதனால் நாம் அறிவது யாது? எழுத்துக் கூட்டங்கள் எல்லாம் சொல் ஆகா என்பதை அறிகிறோம். அதே போல, இரண்டாவது

வரிசையில் உள்ள மூன்று எழுத்துக் கூட்டங்களும் சொற்கள் ஆகா.

**கீழ்வரும் எழுத்துக் கூட்டங்களைப் படி :**

**மாடு காது கண்**

முதற் பிரிவில் உள்ள **டுமா, துகா, ண்க** ஆகியவை மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. அவை இப்போது பொருள் உள்ள சொற்கள் ஆகியுள்ளன. அதேபோல, இரண்டாம் பிரிவில் உள்ள **குரைதி, க்குமூ, டிண்வ** என்னும் எழுத்துக் கூட்டங்களை மாற்றி அமைத்தால், **குதிரை, மூக்கு, வண்டி** என்னும் சொற்களாகும் என்பதை அறிகிறோம்.

**மனப்பாடம் செய் :**

எழுத்துக்கள் ஒன்றை ஒன்று,தொடர்ந்து நின்று,பொருள் தரின் சொல்லாம்.

## 3. எழுத்து

**இவற்றை உச்சரி :**

| | | | | |
|---|---|---|---|---|
| உ | — | ர | — | ல் |

இவை எழுத்துக்கள் என்பதை நீ அறிவாய். இவை ஒவ்வொன்றும் ஒரு **ஒலியைக்** குறிக்கிறது. இவ்வொலிகள் மனிதர் வாயிலிருந்து பிறக்கின்றன. இவற்றைக் காதால்

கேட்கிறோம். காதால் கேட்ட ஒலியைக் கற்பலகை மீதோ, காகிதத்தின் மீதோ **வரி வடிவத்**தில் எழுதுகிறோம். **வரி** என்னும் சொல்லுக்குக் **கோடு** என்பது பொருள். எனவே வாயிலிருந்து பிறக்கும் ஒலியைக் கோடுகளால் குறிக்கிறோம். இவ்வாறு குறிப்பதை நாம் **எழுதுவது** என்கிறோம். எழுதப் படுவதை **எழுத்து** என்று கூறலாம் அல்லவா?

உ-ர-ல் என்னும் எழுத்துக்களைத் தனித் தனியே படி. பிறகு சேர்த்துப் படி. தனித்தனியே படிக்கும்போது அவை வெவ் வேறு ஒலிகளைக் குறிக்கின்றன. சேர்த்துப் படிக்கும்போது **உரல்** என்னும் சொல் உண்டாகிறது. இதனால் நாம் அறிவது யாது? **சொற்கள்** உண்டாவதற்குக் காரணம் ஒலிகள் என்பதாம். இவ்வொலிகளே எழுத் துக்கள் எனப்படுகின்றன.

**மனப்பாடம் செய்:**

**சொற்கள் தோன்றக் காரணமாக உள்ள ஒலிகளே எழுத்துக்கள்.**

## அ. உயிர் எழுத்து

**இவற்றைப்படி:**

**அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.**

இவை பன்னிரண்டும் **உயிர் எழுத்துக்கள்** எனப்படும்.

## ஆ. மெய் எழுத்து

**இவற்றைப் படி :**

**க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.**

இவை பதினெட்டும் **மெய் எழுத்துக்கள்** எனப்படும்.

## இ. உயிர் மெய் எழுத்து

**இவற்றைக் கவனி :**

**க்+அ=க**

**க்+ஐ=கை**

**க்** என்னும் **மெய்** எழுத்தோடு, **அ** என்னும் **உயிர்** எழுத்துச் சேர்ந்து, **க** என்னும் ஒரு புதிய எழுத்துப் பிறந்தது. உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் சேர்ந்து பிறந்த இந்த எழுத்திற்கு **உயிர் மெய் எழுத்து** என்பது பெயர். பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் தனித் தனியே பதினெட்டு மெய் எழுத்துக்களோடு சேர்ந்தால் (12×18) இருநூற்றுப் பதினாறு உயிர்மெய் எழுத்துக்களாகும் அல்லவா? அவற்றை அடுத்த பக்கங்களில் பார்த்துத் தெரிந்து கொள்.

## 1 - க்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | க் | + | அ | = | க |
| 2 | க் | + | ஆ | = | கா |
| 3 | க் | + | இ | = | கி |
| 4 | க் | + | ஈ | = | கீ |
| 5 | க் | + | உ | = | கு |
| 6 | க் | + | ஊ | = | கூ |
| 7 | க் | + | எ | = | கெ |
| 8 | க் | + | ஏ | = | கே |
| 9 | க் | + | ஐ | = | கை |
| 10 | க் | + | ஒ | = | கொ |
| 11 | க் | + | ஓ | = | கோ |
| 12 | க் | + | ஔ | = | கௌ |

## 2 - ங்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | ங் | + | அ | = | ங |
| 2 | ங் | + | ஆ | = | ஙா |
| 3 | ங் | + | இ | = | ஙி |
| 4 | ங் | + | ஈ | = | ஙீ |
| 5 | ங் | + | உ | = | ஙு |
| 6 | ங் | + | ஊ | = | ஙூ |
| 7 | ங் | + | எ | = | ஙெ |
| 8 | ங் | + | ஏ | = | ஙே |
| 9 | ங் | + | ஐ | = | ஙை |
| 10 | ங் | + | ஒ | = | ஙொ |
| 11 | ங் | + | ஓ | = | ஙோ |
| 12 | ங் | + | ஔ | = | ஙௌ |

## 3 - ச்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | ச் | + | அ | = | ச |
| 2 | ச் | + | ஆ | = | சா |
| 3 | ச் | + | இ | = | சி |
| 4 | ச் | + | ஈ | = | சீ |
| 5 | ச் | + | உ | = | சு |
| 6 | ச் | + | ஊ | = | சூ |
| 7 | ச் | + | எ | = | செ |
| 8 | ச் | + | ஏ | = | சே |
| 9 | ச் | + | ஐ | = | சை |
| 10 | ச் | + | ஒ | = | சொ |
| 11 | ச் | + | ஓ | = | சோ |
| 12 | ச் | + | ஔ | = | சௌ |

## 4 - ஞ்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | ஞ் | + | அ | = | ஞ |
| 2 | ஞ் | + | ஆ | = | ஞா |
| 3 | ஞ் | + | இ | = | ஞி |
| 4 | ஞ் | + | ஈ | = | ஞீ |
| 5 | ஞ் | + | உ | = | ஞு |
| 6 | ஞ் | + | ஊ | = | ஞூ |
| 7 | ஞ் | + | எ | = | ஞெ |
| 8 | ஞ் | + | ஏ | = | ஞே |
| 9 | ஞ் | + | ஐ | = | ஞை |
| 10 | ஞ் | + | ஒ | = | ஞொ |
| 11 | ஞ் | + | ஓ | = | ஞோ |
| 12 | ஞ் | + | ஔ | = | ஞௌ |

## 5 - ட்    6 - ண்

| | | |
|---|---|---|
| 1 | ட் + அ = ட | ண் + அ = ண |
| 2 | ட் + ஆ = டா | ண் + ஆ = ணா |
| 3 | ட் + இ = டி | ண் + இ = ணி |
| 4 | ட் + ஈ = டீ | ண் + ஈ = ணீ |
| 5 | ட் + உ = டு | ண் + உ = ணு |
| 6 | ட் + ஊ = டூ | ண் + ஊ = ணூ |
| 7 | ட் + எ = டெ | ண் + எ = ணெ |
| 8 | ட் + ஏ = டே | ண் + ஏ = ணே |
| 9 | ட் + ஐ = டை | ண் + ஐ = ணை |
| 10 | ட் + ஒ = டொ | ண் + ஒ = ணொ |
| 11 | ட் + ஓ = டோ | ண் + ஓ = ணோ |
| 12 | ட் + ஔ = டௌ | ண் + ஔ = ணௌ |

## 7 - த்    8 - ந்

| | | |
|---|---|---|
| 1 | த் + அ = த | ந் + அ = ந |
| 2 | த் + ஆ = தா | ந் + ஆ = நா |
| 3 | த் + இ = தி | ந் + இ = நி |
| 4 | த் + ஈ = தீ | ந் + ஈ = நீ |
| 5 | த் + உ = து | ந் + உ = நு |
| 6 | த் + ஊ = தூ | ந் + ஊ = நூ |
| 7 | த் + எ = தெ | ந் + எ = நெ |
| 8 | த் + ஏ = தே | ந் + ஏ = நே |
| 9 | த் + ஐ = தை | ந் + ஐ = நை |
| 10 | த் + ஒ = தொ | ந் + ஒ = நொ |
| 11 | த் + ஓ = தோ | ந் + ஓ = நோ |
| 12 | த் + ஔ = தௌ | ந் + ஔ = நௌ |

## 9 - ப்

## 10 - ம்

| | 9 - ப் | 10 - ம் |
|---|---|---|
| 1 | ப் + அ = ப | ம் + அ = ம |
| 2 | ப் + ஆ = பா | ம் + ஆ = மா |
| 3 | ப் + இ = பி | ம் + இ = மி |
| 4 | ப் + ஈ = பீ | ம் + ஈ = மீ |
| 5 | ப் + உ = பு | ம் + உ = மு |
| 6 | ப் + ஊ = பூ | ம் + ஊ = மூ |
| 7 | ப் + எ = பெ | ம் + எ = மெ |
| 8 | ப் + ஏ = பே | ம் + ஏ = மே |
| 9 | ப் + ஐ = பை | ம் + ஐ = மை |
| 10 | ப் + ஒ = பொ | ம் + ஒ = மொ |
| 11 | ப் + ஓ = போ | ம் + ஓ = மோ |
| 12 | ப் + ஔ = பௌ | ம் + ஔ = மௌ |

## 11 - ய்

## 12 - ர்

| | 11 - ய் | 12 - ர் |
|---|---|---|
| 1 | ய் + அ = ய | ர் + அ = ர |
| 2 | ய் + ஆ = யா | ர் + ஆ = ரா |
| 3 | ய் + இ = யி | ர் + இ = ரி |
| 4 | ய் + ஈ = யீ | ர் + ஈ = ரீ |
| 5 | ய் + உ = யு | ர் + உ = ரு |
| 6 | ய் + ஊ = யூ | ர் + ஊ = ரூ |
| 7 | ய் + எ = யெ | ர் + எ = ரெ |
| 8 | ய் + ஏ = யே | ர் + ஏ = ரே |
| 9 | ய் + ஐ = யை | ர் + ஐ = ரை |
| 10 | ய் + ஒ = யொ | ர் + ஒ = ரொ |
| 11 | ய் + ஓ = யோ | ர் + ஓ = ரோ |
| 12 | ய் + ஔ = யௌ | ர் + ஔ = ரௌ |

## 13 - ல் 

| | | |
|---|---|---|
| 1 | ல் + அ = ல | வ் + அ = வ |
| 2 | ல் + ஆ = லா | வ் + ஆ = வா |
| 3 | ல் + இ = லி | வ் + இ = வி |
| 4 | ல் + ஈ = லீ | வ் + ஈ = வீ |
| 5 | ல் + உ = லு | வ் + உ = வு |
| 6 | ல் + ஊ = லூ | வ் + ஊ = வூ |
| 7 | ல் + எ = லெ | வ் + எ = வெ |
| 8 | ல் + ஏ = லே | வ் + ஏ = வே |
| 9 | ல் + ஐ = லை | வ் + ஐ = வை |
| 10 | ல் + ஒ = லொ | வ் + ஒ = வொ |
| 11 | ல் + ஓ = லோ | வ் + ஓ = வோ |
| 12 | ல் + ஔ = லௌ | வ் + ஔ = வௌ |

## 14 - வ்

## 15 - ழ் 

| | | |
|---|---|---|
| 1 | ழ் + அ = ழ | ள் + அ = ள |
| 2 | ழ் + ஆ = ழா | ள் + ஆ = ளா |
| 3 | ழ் + இ = ழி | ள் + இ = ளி |
| 4 | ழ் + ஈ = ழீ | ள் + ஈ = ளீ |
| 5 | ழ் + உ = ழு | ள் + உ = ளு |
| 6 | ழ் + ஊ = ழூ | ள் + ஊ = ளூ |
| 7 | ழ் + எ = ழெ | ள் + எ = ளெ |
| 8 | ழ் + ஏ = ழே | ள் + ஏ = ளே |
| 9 | ழ் + ஐ = ழை | ள் + ஐ = ளை |
| 10 | ழ் + ஒ = ழொ | ள் + ஒ = ளொ |
| 11 | ழ் + ஓ = ழோ | ள் + ஓ = ளோ |
| 12 | ழ் + ஔ = ழௌ | ள் + ஔ = ளௌ |

## 16 - ள்

## 17 - ற் 18 - ன்

| | | |
|---|---|---|
| 1 | ற் + அ = ற | ன் + அ = ன |
| 2 | ற் + ஆ = று | ன் + ஆ = னு |
| 3 | ற் + இ = றி | ன் + இ = னி |
| 4 | ற் + ஈ = றீ | ன் + ஈ = னீ |
| 5 | ற் + உ = று | ன் + உ = னு |
| 6 | ற் + ஊ = றூ | ன் + ஊ = னூ |
| 7 | ற் + எ = றெ | ன் + எ = னெ |
| 8 | ற் + ஏ = றே | ன் + ஏ = னே |
| 9 | ற் + ஐ = றை | ன் + ஐ = னை |
| 10 | ற் + ஒ = றெு | ன் + ஒ = னெு |
| 11 | ற் + ஓ = றேு | ன் + ஓ = னேு |
| 12 | ற் + ஔ = றௌ | ன் + ஔ = னௌ |

### ஃ. ஆய்த எழுத்து

ஃ - இது நமது வீட்டில் உள்ள அடுப்பின் மூன்று கொம்மைகள் போலக் காணப்படுகிறது அல்லவா? இதற்கு **ஆய்த எழுத்து** என்பது பெயர்.

இது வரையில் படித்தவற்ருல் எழுத்துக்கள் நான்கு வகைப்படும் என்று அறிந்தாய். அவை எவை? அவை உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர் மெய் எழுத்து, ஆய்த எழுத்து என்பவனாம்.

மனப்பாடம் செய் :

1. உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு.
2. மெய் எழுத்துக்கள் பதினெட்டு.

**3. உயிர் மெய் எழுத்துக்கள் இருநூற்றுப் பதினாறு.**
**4. ஆய்த எழுத்து ஒன்று.**

## வினாக்கள்

1. எழுத்து என்பது என்ன?

2. எழுத்து எத்தனை வகைப்படும்? அவை யாவை?

3. உயிர் எழுத்துக்கள் எவை?

4. மெய் எழுத்துக்கள் எவை?

5. உயிர் மெய் எழுத்துக்கள் எத்தனை? அவை எப்படிப் பிறக்கின்றன?

## பயிற்சி :

**1. கீழே உள்ள சொற்களில் இருக்கும் உயிர் எழுத்துக்களைத் தனியே எடுத்து எழுது :**

| | | | |
|---|---|---|---|
| 1. | அப்பா | 13. | ஆணி |
| 2. | கோணி | 14. | கரும்பு |
| 3. | ஏழை | 15. | ஓட்டு |
| 4. | ஊது குழல் | 16. | இடை |
| 5. | இடுப்பு | 17. | ஓடம் |
| 6. | உடம்பு | 18. | அடுப்பு |
| 7. | எறும்பு | 19. | காது |
| 8. | ஆடு | 20. | ஈட்டி |
| 9. | சுரம் | 21. | வெள்ளி |
| 10. | ஐயம் | 22. | ஊசி |
| 11. | ஔவை | 23. | ஏற்றம் |
| 12. | படு | 24. | ஐயர் |

**2. கீழே உள்ள வாக்கியங்களில் இருக்கும் உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர் மெய் எழுத்து, ஆய்த எழுத்து ஆகியவற்றைக் கீழ்க்காணும் அட்டவணையில் குறி :**

1. அறம் செய விரும்பு.
2. ஐயம் இட்டு உண்.
3. ஏற்பது இகழ்ச்சி.
4. ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டா.
5. எஃகு இரும்பு செய்ய உதவும்.

| உயிர் எழுத்து | | மெய் எழுத்து | | | உயிர் மெய் எழுத்து | ஆய்த எழுத்து |
|---|---|---|---|---|---|---|
| குறில் | நெடில் | வல் லினம் | மெல் லினம் | இடை யினம் | | |
| | | | | | | |

**3. தக்க எழுத்துக்களால் கோடுகளை நிரப்புக :**

1. அ—ன்
2. ஆ—
3. —லை
4. —ட்டம்
5. தி—னு
6. வ—டி
7. அ—காள்
8. த—கை
9. ஊ—
10. தாயா—
11. ஆட்டுத் தோ—
12. சிப்—
13. அப்ப—
14. து—ப்பம்
15. பத—
16. ப—டம்

17. அ—த
18. அ—தி
19. அ—சாதே
20. அ—பா
21. அ—வை
22. கா—ருடி
23. பம்ப—ம்
24. பாடிணு—

4. அட்டவணையில் உள்ள உயிர் மெய் எழுத்துக்களைப் பிரித்து எழுதுக :

| உயிர் மெய் எழுத்து | மெய் எழுத்து | | உயிர் எழுத்து | | உயிர் மெய் எழுத்து |
|---|---|---|---|---|---|
| சூ | ச் | + | ஊ | = | சூ |
| பௌ | | + | | = | |
| தீ | | + | | = | |
| வை | | + | | = | |
| மு | | + | | = | |
| ரே | | + | | = | |

| உயிர் மெய் எழுத்து | மெய் எழுத்து | | உயிர் எழுத்து | | உயிர் மெய் எழுத்து |
|---|---|---|---|---|---|
| நூ | | + | | = | |
| ணை | | | | | |
| வௌ | | | | | |
| கோ | | | | | |
| டி | | | | | |
| ப | | | | | |

# 4. சொல்

## அ. ஓரெழுத்தொருமொழி, எழுத்துத் தொடர்மொழி

இவற்றைப் படி :

1. ஈ பறக்கிறது.
2. நீ போ.
3. பூ வாங்கி வா.

குழந்தாய், இவை ஒவ்வொன்றும் ஒரு முடிந்த கருத்தைத் தெரிவிக்கிறது. ஆதலால் இவை வாக்கியங்கள் என்பதை நீ அறிவாய். சொற்களால் அமைவது வாக்கியம். எழுத்துக்கள் ஒன்றை ஒன்று தொடர்ந்து நின்று ஒரு பொருளைக் குறிப்பதே சொல் என்பதை இரண்டாம் பாடத்தில் படித்தாய். ஆனால், மேலே உள்ள வாக்கியங்களில் இருக்கும் **ஈ, நீ, போ, பூ, வா** என்பன தனி எழுத்துக்களே. ஆயினும் அவற்றுள் ஒவ்வொன்றும் ஒரு பொருளைக் குறிக்கின்றது.

இவ்வாறு, வாக்கியங்களில் ஓர் எழுத்துத் தனித்து நின்று, ஒரு பொருளைக் குறித்தால், அதையும் **சொல்** என்றே கொள்ள வேண்டும். இதற்கு **ஓரெழுத்தொருமொழி (சொல்)** என்பது பெயர். பல எழுத்துக்கள்

தொடர்ந்து நின்று அமையும் சொல் **எழுத்துத் தொடர் மொழி** எனப்படும்.

**மனப்பாடம் செய் :**

ஓர் எழுத்துத் தனித்து நின்று ஒரு பொருளைக் குறிப்பின் அது ஓரெழுத்தொருமொழி எனப்படும். பல எழுத்துக்கள் நின்று பொருளைக் குறிப்பது எழுத்துத் தொடர்மொழி எனப் படும்.

சொல்லாவது, ஓரெழுத்தாலாயினும், இரண்டு முதலிய பல எழுத்துக்களாலாயினும் ஆக்கப்பட்டு, ஒரு பொருளை அறிவிப்பதாம்.

## ஆ. சொற்களின் வகைகள்

### 1. பெயர்ச் சொல்

**இவற்றைப் படி :**

1. **முருகன்** மலை வாழ் தெய்வம்.
2. **சீதை** என் தங்கை.
3. **நாராயணன்** நல்லவன்
4. **யானை** மிருகங்களில் பெரியது.
5. **குயில்** பாடும்.
6. **ஆல்** தழைத்திருக்கும்.
7. **நாற்காலி** அழகாய் இருக்கிறது.
8. **மண்** பல வகைப்படும்.

மேலே தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களைக்கவனி. **முருகன்** என்பது **கடவுளின் பெயர். சீதை, நாராயணன்** என்பன **மக்களின்**

பெயர்கள். **யானை** என்பது ஒரு **மிருகத்தின் பெயர்**. **குயில்** என்பது ஒரு **பறவையின் பெயர்**. **ஆல்** என்பது ஒரு **மரத்தின் பெயர்**. **நாற்காலி, மண்** என்பன **பொருள்களின் பெயர்கள்**. இவை **பெயர்ச் சொற்கள்** எனப்படும். கடவுளின் பெயரையோ, மனிதனின் பெயரையோ, மிருகத்தின் பெயரையோ, பறவையின் பெயரையோ, மரத்தின் பெயரையோ, மற்றப் பொருள்களின் பெயர்களையோ குறிக்கும் எல்லாச் சொற்களும் பெயர்ச் சொற்கள் எனப்படும்.

குறிப்பு: **இலக்கணத்தில் உயிர் உள்ளவையும், உயிர் இல்லாதவையும் பொருள் என்றே கூறப்படும்.**

மனப்பாடம் செய்:

**ஒரு பொருளின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச் சொல்.**

பயிற்சி:

**கீழ்க்காணும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களை எடுத்தெழுது.**

1. பதுமினி பாடினாள்.
2. சிங்கம் கொடிய மிருகம்.
3. நாய் நன்றியுள்ளது.
4. இது ஒரு புத்தகம்.
5. கை ஒடிந்தது.
6. ரோசா மலர் அழகியது.
7. அவன் விளையாடினான்.
8. அப்பா மிக நல்லவர்.
9. ஆசிரியர் வருகிறார்.
10. மயில் ஆடும்.
11. நெருப்பு சுடும்.
12. காற்று வீசுகிறது.
13. கல் கடினமானது.
14. ஆகாயம் நீல நிறம்.

## 2. வினைச் சொல்

இவற்றைப் படி :

1. கோதை **பாடினாள்.**
2. குயில் **கூவுகிறது.**
3. பந்து **உருளுகிறது.**

முதல் வாக்கியத்தில் '**பாடினாள்**' என்னும் சொல் எதைத் தெரிவிக்கிறது? கோதை என்னும் பெண் செய்த தொழிலைத் தெரிவிக்கிறது. இரண்டாவது வாக்கியத்தில் '**கூவுகிறது**' என்னும் சொல் குயில் என்னும் பறவை செய்யும் தொழிலைத் தெரிவிக்கிறது. மூன்றாவது வாக்கியத்தில் '**உருளுகிறது**' என்னும் சொல் பந்தின் தொழிலைத் தெரிவிக்கிறது. இப்படி ஒரு பொருளின் தொழிலைத் தெரிவிக்கும் சொல் **வினைச் சொல்** எனப்படும். **வினை, செயல், தொழில்** என்பன ஒரே அர்த்தம் உள்ள சொற்கள்.

மனப்பாடம் செய் :

**பொருளினது தொழிலை உணர்த்தும் சொல் வினைச் சொல்.**

**வினாக்கள் :**

1. பெயர்ச் சொல் என்பது யாது?
2. வினைச் சொல் என்பது யாது?

## பயிற்சி :

கீழ்க்காணும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் எடுத்து அட்டவணையை நிரப்புக.

1. கண்ணன் வெண்ணெய் தின்றான்.
2. இராமன் சீதையின் கணவன்.
3. அரசன் யானை ஏறிச் சென்றான்.
4. பசு பால் தரும்.
5. குதிரை வண்டி இழுக்கும்.
6. மயில் ஆடும் ; குயில் பாடும்.
7. பாம்பு புற்றில் வாழும்.
8. ஆமை மெல்ல நடக்கும்.
9. புல் பசுமை நிறம் உடையது.
10. சத்தியம் தலை காக்கும்.

| பெயர்ச் சொல் | வினைச் சொல் |
|---|---|
| | |

# 5. சொற்றொடர்

## எச்சச் சொற்றொடரும் முற்றுச் சொற்றொடரும்

இவற்றைப் படி :

1. **பம்பரம் சுழற்றக் கயிறு**
2. **பாம்பு அடிக்கக் கோல் எடுத்து**

இவை சொற்றொடர்கள். ஏன்? முதல் தொடரில் பம்பரம் என்னும் சொல்லைச் சுழற்ற என்னும் சொல் தொடர்ந்து நிற்கிறது. சுழற்ற என்னும் சொல்லைக் கயிறு என்னும் சொல் தொடர்ந்து நிற்கிறது. இப்படியே இரண்டாவது தொடரில் உள்ள நான்கு சொற்களும் ஒன்றை ஒன்று தொடர்ந்து நிற்கின்றன. ஆதலால், இவை சொற்றொடர்கள் (சொல் தொடர்) எனப்படும்.

சொற்கள் ஒன்றை ஒன்று தொடர்ந்து நின்று ஒரு கருத்தைத் தெரிவிப்பது வாக்கியம் என்பதை நீ அறிவாய்.

மேலே உள்ள முதல் தொடரில் மூன்று சொற்கள் இருக்கின்றன. அவை ஒரு கருத்தையும் ஓரளவுக்குத் தெரிவிக்கின்றன. ஆனால் **அக்கருத்து முற்றுப் பெறவில்லை.** ஆதலால்,

இதனை **எச்சச் சொற்றொடர்** என்று கூற வேண்டும். **எச்சம்** என்னும் சொல்லுக்கு **முற்றுப் பெருதது** என்பது பொருளாகும்.

'**பம்பரம் சுழற்றக் கயிறு**' என்னும் எச்சச் சொற்றொடரின் இறுதியில் (கடைசியில்) **வேண்டும்** என்னும் சொல்லைச் சேர்த்தால், '**பம்பரம் சுழற்றக் கயிறு வேண்டும்,**' என்று ஆகும். இப்போது இத்தொடரின் கருத்து முற்றுப் பெறுகிறது. இவ்வாறு கருத்து முற்றுப்பெற்ற தொடரை **முற்றுச் சொற்றொடர்** என்று கூற வேண்டும்.

'**பாம்பு அடிக்கக் கோல் எடுத்து**' என்னும் தொடரும் எச்சச் சொற்றொடரே. அதன் இறுதியில் '**வா**' என்னும் ஓரெழுத்தொரு மொழியைச் சேர்த்தால், '**பாம்பு அடிக்கக் கோல் எடுத்து வா,**' என்று ஆகும். இப்போது இத்தொடர் கருத்து முற்றுப் பெற்ற முற்றுச் சொற்றொடர் ஆகும்.

மனப்பாடம் செய் :

கருத்து முடியாத சொற்றொடர் எச்சச் சொற்றொடர்.

கருத்து முடிந்த சொற்றொடர் முற்றுச் சொற்றொடர் அல்லது வாக்கியம் எனப்படும்.

### வினுக்கள் :

1. எச்சச் சொற்ருெடர் என்பது என்ன ?
2. முற்றுச் சொற்ருெடர் என்பது என்ன ?

### பயிற்சி :

**I கீழ் உள்ள சொற்கூட்டங்களைக் கருத்துத் தெரிவிக்கும் வாக்கியங்களாக மாற்று.**

1. நாளை இருவரும் நாம் போகலாம்.
2. பணிவாய் நடத்தல் பெரியவர்களிடத்தில் வேண்டும்.
3. ஐவரில் தருமர் பாண்டவர் மூத்தவர்.
4. தமிழ் பேசுவது மொழி நாம்.
5. ஆண்டவன் நாட்டை சோழன் சோழ.
6. உதவும் குதிரை இழுக்க வண்டி.
7. பயணம் ரயில் போகலாம் வண்டியில்.
8. பசு பாலை தின்று புல்லைக் கொடுக்கிறது.
9. தந்தையார் பழம் எங்களுக்கு வந்தார் வாங்கி.
10. நாடு வாழ்வது நாம் தமிழ்.

**II தக்க சொற்களைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்பு.**

1. முருகன் மிகவும்———.
2. அவன் நன்ருகப்———.
3. நான் கடைக்குப்———.
4. நாங்கள்———விளையாடினேம்.
5. ஆசிரியர்———கற்பிக்கிருர்.
6. சிங்கம் காட்டில்———.
7. சொன்னதைச்———கிளிப்பிள்ளை.

8. குயில் இனிமையாகப்———
9. மயில்———ஆடும்.
10. கூழானாலும்———குடி.
11. குரங்குக்கு———நீளம்.
12. காக்கை———நிறம்.

**III கீழ் வருவனவற்றுள் முற்றுச் சொற்றொடர்களையும் எச்சச் சொற்றொடர்களையும் தனித் தனியே எடுத்தெழுதுக.**

1. மணி பள்ளிக்குப் போகிறான்.
2. மங்களம் பாட்டுப் பாடினாள்.
3. தம்பி மாடியில் ஏறி
4. ஆசிரியர் இன்று பள்ளிக்கு வரவில்லை.
5. கடைக்குப் போய் கற்பூரம் வாங்கி
6. காலையில் எழுந்து கடவுளைத் தொழு.
7. வீட்டுவேலையைச் செய்யாவிட்டால் ஆசிரியர் தண்டிப்பார்.
8. கோவிலில் மிகப் பெரிய திருவிழா
9. குடத்தை எடுத்துக்கொண்டு குளத்துக்குச் சென்று
10. வாழை மரத்தில் தாறு இல்லை.
11. எங்கள் பள்ளித் தோட்டத்தில் பல வகையான காய்கறிகள்
12. கரும்பைப் பிழிந்து சாறு எடுத்துச் சர்க்கரை

## 6. நிறுத்தல் குறிகள்

### 1. முற்றுப் புள்ளி (.)

**இவற்றைக் கவனி :**

1. என் பள்ளியில் இன்று விளையாட்டுப் போட்டி நடந்தது.

2. அதில் நானும் கலந்துகொண்டேன்.

3. நூறு கெச தூர ஓட்டத்தில் நான் முதல்வனாக வந்தேன்.

4. அதற்காக நான் ஒரு புத்தகத்தைப் பரிசாகப் பெற்றேன்.

மேலே நான்கு வாக்கியங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றின் இறுதியிலும் ஒரு புள்ளி இருப்பதைக் கவனி. அப்புள்ளிக்கு **முற்றுப் புள்ளி** என்பது பெயர். முடிந்த கருத்தைத் தெரிவிக்கும் ஒவ்வொரு வாக்கியத்தின் இறுதியிலும் (கடைசியிலும்) முற்றுப்புள்ளி இட வேண்டும். முற்றுப்புள்ளி வாக்கியத்தின் கருத்து முடிந்துவிட்டது என்பதை அறிவிக்கும் **ஒரு குறி**யாகும். நீ படிக்கும்போது, உனது பாடப் புத்தகத்தில் எங்கெங்கு முற்றுப்புள்ளி இருக்கிறதோ, அங்கெல்லாம் சிறிது நேரம் நிறுத்திப் படிக்கவேண்டும்.

**மனப்பாடம் செய் :**

**ஒரு வாக்கியத்தின் முடிவை அறிவிக்கும் புள்ளி முற்றுப் புள்ளி எனப்படும்.**

**பயிற்சி :**

**கீழுள்ளதில் முற்றுப் புள்ளிகள் தவருன இடங்களில் இடப்பட்டுள்ளன. அவைகளைத் திருத்திச் சரியான இடத்தில் குறி.**

எங்கள் பள்ளியில் ஒரு தோட்டம் உண்டு. அதில். வாழை, தென்னை, பனை முதலிய மரங்கள். இருக் கின்றன அத்தோட்டம் பல பாத்திகளாகப். பிரிக்கப் பட்டுள்ளது, ஒருபாத்தியில் கத்தரிச் செடி இருக்கிறது மற்ருெரு. பாத்தியில் தக்காளிச் செடி. யுள்ளது.

## 2. கால் புள்ளி [,]

**இவற்றைக் கவனி :**

1. நானும், என் அண்ணனும் கடைக் குப்போய், ஆறு நோட்டுப் புத்தகங்களும், இரண்டு பேனுக்களும் வாங்கினேம்.

2. நான் மாலையில் வீட்டிற்குச் சென்று, சிற்றுண்டி சாப்பிட்ட பிறகு, சிறிது நேரம் கழித்து, படிக்கத் துவங்குவேன்.

இவ்விரண்டு வாக்கியங்களைக் கவனி. ஒவ் வொன்றும் இரண்டு மூன்று வேலைகளைத் தெரிவிக்கும் நீண்ட வாக்கியமாக இருக்கிறது. முதல் வாக்கியத்தைக் கவனி. அவ்

133179

வாக்கியத்தை, 'நானும், என் அண்ணனும் கடைக்குப் போனோம்.' 'ஆறு நோட்டுப் புத்தகங்களும், இரண்டு பேனைக்களும் வாங்கினோம்.' என இரண்டு சிறு வாக்கியங்களாகப் பிரிக்கலாம். ஆனால் அது அவ்வாறு இல்லை. ஒரே நீண்ட வாக்கியமாக இருக்கிறது. நீண்ட வாக்கியங்களைக் கருத்து மாறாமல் படிக்க வேண்டுமானால்,[,]இக்குறியை இட வேண்டும். ஒரு கருத்தின் முடிவிற்கும், அடுத்த கருத்தின் துவக்கத்திற்கும் இடையில் இதை இட வேண்டும்.

ஒரு நீண்ட வாக்கியத்தைக் கருத்துத் தவறாமல் நிறுத்திப் படிக்கக் குறிக்கும் குறிக்குப் பெயர் **கால் புள்ளி** என்பதாகும். இதற்கு ஆங்கிலத்தில் **'காமா'** என்பது பெயர்.

**பயிற்சி :**

**தக்க இடத்தில் கால் புள்ளி இட்டுக் காட்டு.**

கந்தனும் முருகனும் இணைபிரியா நண்பர்கள். ஒரு நாள் அவர்கள் விளையாடிக் கொண்டிருந்தபோது அவர்களிடையே சிறு சண்டை ஏற்பட்டது. இணை பிரியாதிருந்த அவர்கள் பல நாட்கள் வரை பேசாமல் இருந்தது மாணவர் அனைவருக்கும் ஆச்சரியமாக இருந்தது. ஆசிரியர் இருவரையும் அழைத்து விசாரித்த பிறகு அவர்களுக்கு நல்லுரை பல கூறி அவர்களை மீண்டும் நண்பர்களாக்கினர்.

TB P31(4) N59

(ஐந்தாம் வகுப்பு)

# 1. எழுத்து

நான்காம் வகுப்பில் படித்ததைத் திருப்பல்:

குழந்தாய், நான்காம் வகுப்பில் எழுத்தைப்பற்றிச் சில விஷயங்களை அறிந்தாய் அல்லவா? அவை யாவை என்பதை நினைவுக்குக் கொண்டு வரலாம். அவையாவன:

1. சொற்கள் தோன்றக் காரணமாக உள்ள ஒலிகளே எழுத்துக்கள்.

2. அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்னும் பன்னிரண்டும் உயிர் எழுத்துக்கள்.

3. க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்னும் பதினெட்டும் மெய் எழுத்துக்கள்.

4. பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும், பதினெட்டு மெய்களோடு தனித்தனிக் கூடிப் பிறக்கும் இருநூற்றுப் பதினாறும் உயிர்மெய் எழுத்துக்கள்.

5. ஃ என்னும் எழுத்து ஆய்த எழுத்து.

இனி எழுத்துக்களைப்பற்றி மேலும் சில விஷயங்களை அறியலாம்:

## 2. எழுத்தின் வடிவம்

**கீழ்வரும் எழுத்துக்களை உச்சரித்துப் பார் :**

| அ | — | வ | — | ன் |
|---|---|---|---|---|

'**அ**' என்பதன் ஒலியும், '**வ**' என்பதன் ஒலியும் ஒன்று போல இல்லை அல்லவா ? அவ்வாறே '**வ**' என்பதன் ஒலியும், '**ன்**' என்பதன் ஒலியும் ஒன்று போல இல்லை. இதனால் நாம் அறிவது யாது? **ஒவ்வோர் எழுத்துக்கும் ஓர் ஒலி வடிவம் இருக்கிறது** என்பதை அறிகிறோம்.

குழந்தாய், உன் ஆசிரியர் '**அ, வ, ன்**' என்று ஒவ்வோர் எழுத்தையும் வாயாற் சொல்லி, அவற்றை எழுதச் சொன்னால் நீ என்ன செய்கிறாய்? நீ அவற்றை உனது கற்பலகையின் மீது கோடு (வரி)களால் அமைக்கிறாய். அதாவது, நீ ஒலி வடிவிற் கேட்ட எழுத்துக்களை வரி வடிவில் எழுதுகிறாய். எனவே **எழுத்துக்கு வரி வடிவம் உண்டு** என்பதை அறிகிறோம்.

**மனப்பாடம் செய் :**

**எழுத்துக்கு இரண்டு வடிவங்கள் உண்டு. ஒன்று ஒலி வடிவம் ; இன்னொன்று வரி வடிவம்.**

# 3. உயிர் எழுத்து

## குறில்-நெடில்

இவற்றை உச்சரித்துப் பார்:

(1) அ, இ, உ, எ, ஒ—குறில்

(2) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ—நெடில்

இரண்டு வரிசைகளில் உள்ள எழுத்துக்களை உச்சரித்துப் பார்த்தாய் அல்லவா? அவற்றின் ஓசையில் நீ அறியும் வேறுபாடு என்ன? முதல் வரிசையில் உள்ள ஐந்து எழுத்துக்கள் குறுகியும், இரண்டாவது வரிசையில் உள்ள ஏழு எழுத்துக்கள் நீண்டும் ஒலிக்கின்றன. எனவே, குறுகிய ஓசை உடைய எழுத்துக்களைக் **குற்றெழுத்துக்கள்** என்று கூறலாம். குற்றெழுத்துக்குக் **குறில்** என்பது வேறு பெயர். நீண்ட ஓசை உடைய எழுத்துக்களை **நெட்டெழுத்துக்**கள் என்று கூறலாம். நெட்டெழுத்துக்கு **நெடில்** என்பது வேறு பெயர்.

**மனப்பாடம் செய்:**

**உயிர் எழுத்துக்கள் குறில், நெடில் என இருவகைப்படும். அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் குறில். ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழும் நெடில்.**

# 4. மெய்யெழுத்து

## வல்லினம், மெல்லினம், இடையினம்

இவற்றை உச்சரித்துப் பார்:

(1) க், ச், ட், த், ப், ற்—வல்லினம்
(2) ங், ஞ், ண், ந், ம், ன்—மெல்லினம்
(3) ய், ர், ல், வ், ழ், ள்—இடையினம்

முதல் வரிசையில் உள்ள எழுத்துக்களை உச்சரித்தால், அவை **வலிந்த ஓசை** பெற்றிருப்பது தெரியும். ஆதலால் அவற்றை **வல்லினம்** என்று கூறுகிறோம்.

இரண்டாவது வரிசையில் உள்ள எழுத்துக்களை உச்சரித்தால், அவை **மெலிந்த ஓசை** பெற்றிருப்பது தெரியும். ஆதலால் அவற்றை **மெல்லினம்** என்று கூறுகிறோம்.

மூன்றாவது வரிசையில் உள்ள எழுத்துக்களை உச்சரித்தால் அவை வல்லினத்துக்கும் மெல்லினத்துக்கும் **இடைப்பட்ட ஓசை** பெற்றிருப்பது தெரியும். ஆதலால், அவற்றை **இடையினம்** என்று கூறுகிறோம்.

மனப்பாடம் செய்:

மெய்யெழுத்துக்கள் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகைப்படும், க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறும் வல்லினம். ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறும் மெல்லினம். ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறும் இடையினம்.

குறிப்பு : (1) மெய்யெழுத்துக்கள் **புள்ளி எழுத்துக்கள்** என்பதை மறவாதே.

(2) மெய்யெழுத்துக்களுக்கு **உடம்பு, ஒற்று, புள்ளி** என்னும் வேறு பெயர்களும் உண்டு.

(3) வல்லினத்துக்கு **வலி, வன்கணம்** என்னும் பெயர்கள் உண்டு.

(4) மெல்லினத்துக்கு **மெலி, மென்கணம்** என்னும் பெயர்கள் உண்டு.

(5) இடையினத்துக்கு **இடை, இடைக்கணம்** என்னும் பெயர்கள் உண்டு.

**வினுக்கள் :**

1. உயிர் எழுத்து எத்தனை வகைப்படும்? அவை எவை?

2. குற்றெழுத்துக்கள் எத்தனை? அவை ஏன் அப் பெயர் பெற்றன?

3. நெட்டெழுத்துக்கள் எத்தனை? அவை அப் பெயர் பெறக் காரணம் என்ன?

4. மெய்யெழுத்துக்களை எத்தனை இனங்களாகப் பிரிக்கலாம்? அவை யாவை?

5. வல்லினம் எவை? அவை ஏன் அப்பெயர் பெற்றன?

6. மெல்லினம் எவை? அவை ஏன் அப்பெயர் பெற்றன?

7. இடையினம் எவை? அவை அப்பெயர் பெறக் காரணம் யாது?

8. வல்லினம், மெல்லினம், இடையினம் – இவை ஒவ்வொன்றுக்கும் வழங்கும் வேறு பெயர்கள் எவை?

## பயிற்சி :

1. கீழ்வரும் சொற்களில் உள்ள குறில், நெடில்களை எடுத்து எழுதி அட்டவணையை நிரப்பு :

| | | | | |
|---|---|---|---|---|
| ஊமை | இலை | எருது | அணில் | இடுப்பு |
| ஆமை | உலை | ஒன்று | ஔவை | ஐவர் |
| உடல் | ஊதல் | எலி | அடை | ஓணான் |
| ஆடை | ஈசெல் | ஐவர் | ஈட்டி | ஏணி |

### அட்டவணை

| குறில் | நெடில் |
|---|---|
| | |

2. கீழ்வரும் சொற்களில் உள்ள மெய்யெழுத்துக்களைக் கொண்டு அட்டவணையை நிரப்பு :

| | | | | |
|---|---|---|---|---|
| மார்பு | சுக்கு | செவ்வாழை | கண் | புற்று |
| மஞ்சள் | பல்லக்கு | தாழ்ப்பாள் | பந்து | பொம்மை |
| குஞ்சம் | கொய்யா | பட்டு | வாத்து | மன்னர் |
| தங்கம் | பச்சை | பங்கு | அப்பம் | சங்கு |

அட்டவணை

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| | | |

# 5. சொல்

நான்காம் வகுப்பில் படித்ததைத் திருப்பல் :

குழந்தாய், நான்காம் வகுப்பில் சொல்லைப்பற்றிச் சில விஷயங்களை அறிந்தாய் அல்லவா? அவை யாவை என்பதை நினைவுக்குக் கொண்டு வரலாம். அவையாவன :

1. எழுத்துக்கள் தனித்து நின்று ஒரு பொருளைத் தெரிவித்தால் சொல்லாம். அது ஓரெழுத்தொரு மொழி எனப்படும்.

உதாரணம் : ஈ, கை, வா, போ.

2. எழுத்துக்கள் ஒன்றை ஒன்று தொடர்ந்து நின்று ஒரு பொருளைத் தெரிவித்தால் சொல்லாம். அதற்கு எழுத்துத் தொடர்மொழி என்பது பெயர்.

உதாரணம் : அது, அணில், பண்டம், அங்குலம்.

3. ஒரு பொருளின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல்.

உதாரணம் : முருகன், பசு, மயில், மரம், கல்.

4. பொருளினது தொழிலை உணர்த்தும் சொல் வினைச் சொல்.

உதாரணம் : வந்தான், ஓடுகிறது, போவான்.

இனிச் சொல்லைப் பற்றி மேலும் சில விஷயங்களை அறியலாம் :

# 6. பெயர்ச் சொல்

## அ. திணை

### உயர்திணை, அஃறிணை

இவற்றைப் படி :

1. **முருகன்** மலைநாட்டுத் **தெய்வம்.**
2. **ஆசிரியர்** பாடம் கற்பிக்கிறார்.

**முருகன், தெய்வம்** என்னும் சொற்கள் **தேவர்**களை(கடவுளை)க் குறிக்கும் சொற்கள். **ஆசிரியர்** என்னும் சொல் ஒரு **மனித**ரைக் குறிக்கும் சொல்.

**முருகன், கடவுள், ஆசிரியர்** என்பன பெயர்ச் சொற்கள். இவை தேவர், மனிதர் ஆகிய **உயர்ந்த சாதிப்** பொருள்களைக் குறிக்கும் சொற்கள். ஆதலால் இவை **உயர்திணைப் பெயர்கள்** எனப்படும். ‘**திணை**’ என்னும் சொல்லுக்குச் ‘**சாதி**’ என்பது பொருள்.

**மனப்பாடம் செய் :**

**மனிதரையும், தேவரையும் குறிக்கும் சொற்கள் உயர் திணைப் பெயர்களாம்.**

**இவற்றைப் படி :**

1. **பசு** பால் தரும்.
2. **குயில்** பாடும்.
3. **நிலம்** பிளந்தது.
4. **நீர்** பாய்கிறது.

**பசு, மயில்** என்பன உயிர் உள்ள பொருள்கள். ஆனால் தேவர், மனிதர் போலப் பகுத்தறிவு இல்லாதவை. ஆகவே அவை உயர்ந்த சாதி யல்ல. **உயர்வு அல்லாத சாதி.**

**நிலம், நீர்** என்பன உயிர் இல்லாத பொருள்கள். எனவே, அவையும் **உயர்வு அல்லாத சாதி.** உயர்வு அல்லாத சாதிப் பொருள்களைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள் **அஃறிணைப்** பெயர்கள் எனப்படும். (அஃறிணை = அல் + திணை; உயர்வு அல்லாத திணை)

**மனப்பாடம் செய் :**

**மிருகம், பறவை முதலிய உயிர் உள்ள பொருள்களையும், நிலம், நீர் முதலிய உயிர் இல்லாத பொருள்களையும் குறிக்கும் பெயர்கள் அஃறிணைப் பெயர்களாம்.**

பயிற்சி :

1. கீழ்வருனவற்றில் உள்ள உயர்திணை, அஃறிணைப் பெயர்களைப் பிரித்தெழுது :

1. கண்ணன் போனான்.
2. சென்னை ஒரு பட்டினம்.
3. வீரப்பன் வீடு பெரியது.
4. தாயார் மிக நல்லவர்.
5. அங்கு இருப்பது புலி.
6. அதோ வருபவன் குப்பன்.
7. பந்து ஆடினான்.
8. கிளி பச்சை நிறம்.
9. நாய் வால் ஆட்டும்.
10. பங்கசம் பாடினாள்.
11. கல் உடைந்தது.
12. பழம் பழுத்தது.

## ஆ. பால்

### ஆண்பால், பெண்பால்

இவற்றைப் படி :

1. **கந்தன்** படிக்கிறான்.

2. **மரகதம்** பாடுகிறாள்.

மேலே தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களைக் கவனி. **கந்தன், மரகதம்** என்னும் இரண்டும் பெயர்ச் சொற்கள். இவை பகுத்தறிவு உள்ள மக்களின் பெயர்கள் அல்லவா ? ஆகவே **உயர்திணைப் பெயர்கள்**. ஆனால், **கந்தன்** என்னும் சொல் ஓர் ஆணின் பெயரைக் குறிக்கிறது. மரகதம் என்னும் சொல் ஒரு பெண்ணின் பெயரைக் குறிக்கின்றது. ஆகவே **ஆணைக் குறிக்கும் பெயர்**

**ஆண்பாற் பெயர் எனப்படும். பெண்ணைக் குறிக்கும் பெயர் பெண் பாற் பெயர் எனப்படும்.**

மனப்பாடம் செய் :

ஓர் ஆணைக் குறிக்கும் பெயர்ச் சொல் ஆண்பாற் பெயர். ஒரு பெண்ணைக் குறிக்கும் பெயர்ச் சொல் பெண்பாற் பெயர்.

## பலர் பால்

இவற்றைப் படி :

1. **ஆசிரியர்கள்** வருகிறார்கள்.
2. **ஆசிரியைகள்** போகிறார்கள்.
3. **ஊரார்** ஒன்று கூடினர்.

இங்கே, **ஆசிரியர்கள்** என்பது உயர் திணைப் பெயர்ச் சொல். இது ஓர் ஆணின் பெயர் அன்று. **ஆண்கள் பலரைக் குறிக்கும் பெயர்.** ஆதலால் இதனை ஆண்பால் என்று கூறாமல், **பலர்பால்** என்றே கூறவேண்டும்.

அப்படியே **ஆசிரியைகள்** என்பது உயர் திணைப் பெயர்ச் சொல். இது ஒரு பெண்ணின் பெயர் அன்று. **பெண்கள் பலரைக் குறிக்கும் பெயர்.** ஆதலால் இதனைப் பெண் பாற் பெயர் என்று கூறாமல், **பலர்பால்** என்றே கூறவேண்டும்.

**ஊரார்** என்பதும் உயர் திணைப் பெயரே. ஆனால் இது ஆண்களையும் பெண்களையும்

பொதுவாகக் குறிக்கும் பெயர்ச்சொல். ஆதலால், இதையும் **பலர்பால்** என்றே கூற வேண்டும்.

**மனப்பாடம் செய் :**

**ஆண்கள் பலரைக் குறிக்கும் பெயரும், பெண்கள் பலரைக் குறிக்கும் பெயரும், ஆணும், பெண்ணும் சேர்ந்த பலரைக் குறிக்கும் பெயரும் பலர்பாற் பெயர் எனப்படும்.**

## ஒன்றன் பால், பலவின் பால்

**இவற்றைப் படி :**

1. **மரம்** சாய்ந்தது.
2. **குதிரை** ஓடுகிறது.
3. **மரங்கள்** சாய்ந்தன.
4. **குதிரைகள்** ஓடுகின்றன.

மேலே உள்ள நான்கு சொற்றொடர்களையும் கவனி. முதல் இரண்டு சொற்றொடர்களில் உள்ள **மரம், குதிரை** ஆகிய சொற்களைக் கவனி. அவை இரண்டும் பெயர்ச் சொற்கள்; பகுத்தறிவு இல்லாதவை. ஆதலால் **அஃறிணை** எனப்படும். முதல் சொற்றொடரில் உள்ள **மரம்** என்னும் சொல் **ஒரு** மரத்தைக் குறிக்கிறது. மூன்றாவது சொற்றொடரில் உள்ள **மரங்கள்** என்னும் சொல் **பல** மரங்களைக் குறிக்கிறது.

அதே போல மூன்ருவது, நான்காவது சொற்ெருடர்களைக் கவனி. **குதிரை** என்னும் சொல் **ஒரு** குதிரையையும் **குதிரைகள்** என்னும் சொல் **பல** குதிரைகளையும் குறிக்கின்றன. **ஒரு பொருளைக் குறிக்கும் அஃறிணைப் பெயர் ஒன்றன்பாற் பெயர் எனப்படும். பல பொருள் களைக் குறிக்கும் அஃறிணைப் பெயர் பலவின் பாற் பெயர் எனப்படும்.**

மனப்பாடம் செய் :

1. ஒரு பொருளைக் குறிக்கும் அஃறிணைப் பெயர் ஒன்றன்பாற்பெயர்.

2. பல பொருள்களைக் குறிக்கும் அஃறிணைப் பெயர் பலவின்பாற் பெயர்.

குறிப்பு :

1. ஆண் பால், பெண் பால், பலர் பால், ஒன்றன் பால், பலவின் பால் எனப் பால், ஐந்து வகைப்படும்.
2. ஆண் பால், பெண் பால், பலர்பால் ஆகிய மூன்று பாலும் உயர்திணையில் மட்டுமே வரும்.
3. ஒன்றன் பால், பலவின் பால் ஆகிய இரண்டு பாலும் அஃறிணையில் மட்டுமே வரும்.

**வினுக்கள் :**

1. பால் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. பால் என்ருல் என்ன?

3. ஆண்பால் என்றால் என்ன ?
4. பெண்பால் என்றால் என்ன ?
5. பலர் பாலுக்கும் பலவின் பாலுக்கும் உள்ள வித்தியாசம் யாது ?
6. ஒன்றன் பால் என்றால் என்ன ?
7. உயர்திணையில் வரும் பால்கள் எவை?
8. அஃறிணையில் வரும் பால்கள் எவை ?

**பயிற்சி :**

**கீழ்க்காணும் சொற்றொடர்களில் உள்ள ஐந்து பால்களையும் அட்டவணையில் குறித்துக் காட்டு :**

1. கந்தன் போனான். 2. கமலா வருகிறாள். 3. மாதர் ஆடினர். 4. அரசர் வருவார். 5. மாடு முட்டும். 6. பசு பால் தரும். 7. பறவைகள் பறந்தன. 8. மாணவர் இருக்கின்றனர். 9. பண்டம் விற்பவர் வியாபாரி. 10. மாணவி வந்தாள். 11. குழந்தை ஆடுகிறது. 12. கன்று துள்ளுகிறது.

| ஆண் பால் | பெண் பால் | பலர் பால் | ஒன்றன் பால் | பலவின் பால் |
|---|---|---|---|---|
| | | | | |

# இ. எண்

**இவற்றைப் படி :**

1. **மரம்** சாய்ந்தது.

2. **மரங்கள்** சாய்ந்தன.

மரம் என்னும் சொல் ஒரு பொருளைக் குறிக்கிறது. இலக்கணத்தில் ஒரு பொருளைக் குறிக்கும் சொல்லுக்கு **ஒருமை எண்** என்பது பெயர். எண் என்பது பொருளின் எண்ணிக்கையைக் குறிப்பதாகும். **மரங்கள்** என்னும் சொல் ஒரு பொருளுக்கு மேற்பட்ட **பல பொருள்களைக்** குறிக்கிறது. எனவே ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறிக்கும் சொல்லின் எண் **பன்மை எண்** எனப்படும்.

**மனப்பாடம் செய் :**

**ஒரு பொருளைக் குறிப்பது ஒருமை எனப்படும். பல பொருள்களைக் குறிப்பது பன்மை எனப்படும்.**

**வினக்கள் :**

1. எண் எத்தனை? அவை யாவை?
2. ஒருமை என்றால் என்ன?
3. பன்மை என்றால் என்ன?

**பயிற்சி :**

**கீழ் வருவனவற்றில் இருக்கும் ஒருமை, பன்மைகளைப் பிரித்து எழுது :**

1. மாணவன்
2. ஆணை
3. ஆடவன்
4. வீடு
5. கடைகள்
6. செடிகள்
7. அணில்
8. பந்து
9. பறவைகள்
10. புத்தகம்
11. இருவர்
12. பெட்டி
13. ஆடைகள்
14. அவர்கள்
15. ஒருவர்
16. மாதர்

## ஈ. இடம்

இவற்றைப் படி :

1. **நான்** சொல்கிறேன்.
2. **நீ** கேள்.
3. **அவன்** நல்லவன்.
4. **அவள்** அழகி.
5. **அது** ஒரு மரம்.
6. **அவர்கள்** கொடியவர்கள்.
7. **அவை** மலர்கள்.

மேலுள்ள வாக்கியங்களைக் கவனி. முதல் வாக்கியத்தில் உள்ள **நான்** என்னும் சொல் யாரைக் குறிக்கிறது? யார் பேசுகிறாரோ அவரைக் குறிக்கிறது. **பேசுபவர் தம்மைக் குறிப்பது தன்மைப் பெயர் எனப்படும்.**

இரண்டாவது வாக்கியத்தில் உள்ள **நீ** என்னும் சொல் யாரைக் குறிக்கிறது? பேசு

பவர் முன் இருப்பவரைக் குறிக்கிறது. இவ்வாறு **பேசுபவர் முன் நிற்பவரைக் குறிக்கும் சொல் முன்னிலைப் பெயர் எனப்படும்.**

மேலே கூறப்பட்ட தன்மைப் பெயரும், முன்னிலைப் பெயரும் தவிர, மற்ற எல்லாப் பெயர்களும் **படர்க்கைப் பெயர்கள்** எனப்படும். எனவே, **அவன், அவள், அது, அவர்கள், அவை என்பன படர்க்கைப் பெயர்கள்** என்பதை அறியவேண்டும்.

தன்மை

- ஒருமை
  - நான் — யான்
- பன்மை
  - நாம் — நாங்கள்
  - யாம் — யாங்கள்

முன்னிலை

- ஒருமை
  - நீ
- பன்மை
  - நீர் — நீவிர் — நீங்கள்

படர்க்கை

- ஒருமை
  - அவன்—அவள்
  - அது
- பன்மை
  - அவர்கள்—அவைகள்

மனப்பாடம் செய் :

1. பெயர்கள் இட வகையால் தன்மைப் பெயர், முன்னிலைப் பெயர், படர்க்கைப் பெயர் என மூவகைப்படும்.
2. பேசுபவரைக் குறிப்பது தன்மைப் பெயர்.
3. பேசுபவர் முன் இருப்பவரைக் குறிப்பது முன்னிலைப் பெயர்.
4. தன்மைப் பெயரும், முன்னிலைப் பெயரும் அல்லாத மற்றெல்லாப் பெயர்களும் படர்க்கைப் பெயர்கள்.

குறிப்பு : பெயர்ச் சொல் திணை, பால், எண், இடம் ஆகிய நான்கையும் காட்டும். மேலும் அது வேற்றுமை ஏற்கும்.

வினாக்கள் :

1. *இடம் எத்தனை ? அவை யாவை ?*
2. *தன்மை இடம் என்றால் என்ன ?*
3. *முன்னிலை இடம் என்றால் என்ன ?*
4. *படர்க்கை இடம் என்றால் என்ன ?*

பயிற்சி :

கீழ்வருவனவற்றில் உள்ள தன்மை, முன்னிலை, படர்க்கைச் சொற்களைப் பிரித்துக் கீழே உள்ள அட்டவணையில் குறி:

1. *நாங்கள் பந்து ஆடப் போகிறோம்.*
2. *அவர்கள் ஆடியதைப் பார்த்தார்கள்.*
3. *மூக்கா இங்கே வா.*
4. *நான் உனக்குக் கொடுத்த புத்தகம் எங்கே ?*
5. *இராமா, கோபாலன் இன்று என் வீட்டிற்கு வந்தான்.*
6. *கதிர்வேலன் எப்போது வருவான் ?*

7. குண்டா, நானும் கோபாலனும் காற்றடி விட்டதைப் பார்த்தாயா ?
8. இவள் என்னுடைய தங்கை.
9. இவன் என்னுடைய தம்பி.
10. அவர் என்னுடைய தந்தையார்.
11. நானும் நீயும் நண்பரல்லரா ?
12. நீர் எப்பொழுது வந்தீர் ?

| தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|
| | | |

# 7. வினைச் சொல்

## அ. முற்றுவினை, எச்சவினை

ஒரு பொருளின் தொழிலை உணர்த்துவது வினைச் சொல் என்பதை நீ அறிவாய். வினைச் சொல்லும் பெயர்ச் சொல்லைப் போலத் **திணை பால், எண், இடம்** ஆகிய நான்கையும் காட்டும், மேலும் அது **காலத்தையும் காட்டும்.**

**இவற்றைப் படி :**

1. அவன் **படித்தான்**

2. அவன் **படித்த** (பையன்)
3. அவன் **படித்து** (அறிந்தான்)

முதல் வாக்கியத்தில் உள்ள **படித்தான்** என்பது வினைச் சொல். அது **முற்றுப் பெற்ற தொழிலைக்** குறிக்கிறது. எனவே அது **முற்று வினை** எனப்படும். இரண்டாவது வாக்கியத்தில் உள்ள **படித்த** என்னும் சொல்லால் குறிக்கப்படும் **தொழில் முற்றுப் பெறவில்லை**. எனவே அது **எச்சவினை** எனப்படும். **எச்சம்** என்னும் சொல்லுக்கு **முற்றுப் பெறாதது** என்பது பொருள். மூன்றாம் வாக்கியத்தில் உள்ள **படித்து** என்னும் சொல்லால் குறிக்கப்படும் தொழிலும் முற்றுப் பெறவில்லை. எனவே அதுவும் **எச்சவினை** எனப்படும். ஆனால் இரண்டாவது வாக்கியத்திலுள்ள படித்த என்னும் எச்சவினை **பையன்** என்னும் **பெயர்ச் சொல்லைக்** கொண்டு முடிகிறது. இவ்வாறு பெயர்ச் சொல்லைக் கொண்டு முடியும் எச்சவினை **பெயர் எச்சம்** எனப்படும். மூன்றாவது வாக்கியத்தில் உள்ள படித்து என்னும் எச்சவினை **அறிந்தான்** என்னும் **வினைச் சொல்லைக்**கொண்டு முடிகிறது. இவ்வாறு ஒரு வினைச் சொல்லைக் கொண்டு முடியும் எச்சவினை **வினை எச்சம்** எனப்படும்.

மனப்பாடம் செய் :

1. முற்றுப் பெற்ற தொழிலைக் குறிப்பது முற்றுவினை.
2. முற்றுப்பெறாத தொழிலைக் குறிப்பது எச்சவினை.
3. பெயரைக் கொண்டு முடியும் எச்சவினை பெயரெச்ச வினை.
4. வினையைக் கொண்டு முடியும் எச்சவினை வினையெச்ச வினை.

## ஆ. காலம்

இவற்றைப் படி :

1. நான் நேற்றுப் **படித்தேன்.**
2. நான் இப்போது **படிக்கிறேன்.**
3. நான் நாளைக்குப் **படிப்பேன்.**

மேலே உள்ள **படித்தேன், படிக்கிறேன், படிப்பேன்** என்னும் வினை முற்றுக்களைக் கவனி. இவற்றுள் **படித்தேன்** என்னும் சொல் முன்னமே செய்து முடிக்கப்பட்ட வேலையைக் குறிக்கிறது. இவ்வாறு முடிந்துபோன வேலையைக் குறிக்கும் வினைச் சொல் **இறந்தகால வினை** எனப்படும்.

இரண்டாவது வாக்கியத்தில் உள்ள **படிக்கிறேன்** என்னும் முற்று வினையைக் கவனி. அது **இப்பொழுது நடைபெறும்** (நிகழும்) தொழிலைக் குறிக்கிறது. இவ்வாறு தொழில்

நடை பெற்றுக்கொண்டிருப்பதைக் குறிக்கும் வினைச் சொல் **நிகழ்கால வினை** எனப்படும்.

மூன்றாவது வாக்கியத்தில் உள்ள **படிப்பேன்** என்னும் வினைமுற்றைக் கவனி. அது எதைக்குறிக்கிறது? வருங்காலத்தில் நீசெய்யப்போகும் வேலையைத் தெரிவிக்கிறது. அதாவது **இனிமேல் நீ செய்யப்போகும் தொழிலைத் (வினையைத்) தெரிவிக்கிறது. ஆகவே அது எதிர் கால வினை** எனப்படும். எதிர்காலம் என்றால் இனிமேல் வரப்போகும் காலம் என்பது பொருள்.

வினைச் சொல் காட்டும் **காலம் மூன்று** வகைப்படும். அவை **இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம்** எனப்படும்.

**மனப்பாடம் செய் :**

1. நடந்து போன செயலைக் குறிப்பது இறந்த காலம்.
2. நடந்துகொண்டிருக்கிற செயலைக் குறிப்பது நிகழ் காலம்.
3. நடக்கப் போகும் செயலைக் குறிப்பது எதிர்காலம்.

**வினாக்கள் :**

1. *வினைச் சொல் என்றால் என்ன ?*
2. *வினைச் சொல் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?*

3. காலம் எத்தனை ? அவை யாவை ?
4. இறந்த காலம் என்றால் என்ன ?
5. நிகழ் காலம் என்றால் என்ன ?
6. எதிர் காலம் என்றால் என்ன ?

பயிற்சி :

**I. கீழுள்ள கோடிட்ட இடங்களில் தக்க வினைமுற்றுச் சொற்களை அமைத்துக் காட்டு :**

1. இராமன் பந்து ———.
2. பத்மா மலர் ———.
3. நாளை நான் ———.
4. கபாலியும் கோமதியும் கடைக்குப் ———.
5. நான் சாப்பாடு ———.
6. நடராசன் நாளை ———.
7. குதிரை நன்றாக ———.
8. அவன் என்னை ———.

**II. கீழ்வருவனவற்றுள் இருக்கும் முற்று வினையையும் எச்ச வினையையும் தனித்தனியே பிரித்து எழுது :**

1. நான் வருகிறேன்.
2. சென்று வந்தேன்.
3. வந்து போனான்.
4. நாளை வருவோம்.
5. அழுத தங்கை.
6. வந்த வரதன்.
7. போய் வருகிறேன்.
8. வந்த பையன்.
9. நீ எவ்வாறு வந்தாய்?
10. சென்ற பிள்ளை.
11. சிதம்பரம் சிரித்தான்.
12. அண்ணன் அடித்தான்.

**III. கீழ்வரும் ஒவ்வொன்றும் எக்காலத்தைக் காட்டுகிறது :**

ஆடுகிறாய் – அழுவேன் – குதித்தான் – அடிக்கிறேன் – போவேன் – வருகிறேன் – சாப்பிட்டேன் –

பேசிக்கொண்டிருக்கிறான் – வாங்குவாய் – முடித்தான் – செய்வேன் – பாடுவான் – ஆடிக்கொண்டிருக்கிறான் – தேடுவர் – அழைத்தனர் – கொடுப்பர் – தருகின்றனர் – கொடுத்து விட்டனர்.

**IV.** **கீழ்வருவனவற்றிற்குத் திணை, பால், எண், இடம், காலம் ஆகியவற்றை அட்டவணையில் குறி :**

குதித்தான் – பறந்தது – இறந்தன – வந்தனர் – பாடிக்கொண்டிருக்கிறாள் – வாங்கினான் – பேசும் – வருவீர் – தேடுகிறான் – வந்து கொண்டிருக்கிறான்.

| சொல் | திணை | பால் | எண் | இடம் | காலம் |
|---|---|---|---|---|---|
| குதித்தான் | உயர் திணை | ஆண் பால் | ஒருமை | படர்க்கை | இறந்த காலம். |

## 8. இடைச் சொல்

**இவற்றைப் படி :**

1. சந்திரனை மதி **என்று** சொல்வர்.
2. ஆசிரியர் 'வா' **என** அழைத்தார்.

முதல் வாக்கியத்தில் உள்ள சந்திரன், மதி என்பன பெயர்ச் சொற்கள். சொல்வர் என்பது வினைச்சொல். '**என்று**' என்பது என்ன சொல்? 'என்று' என்னும் சொல்லை

நீக்கி, வாக்கியத்தைப் படித்தால், வாக்கியம் பொருள் அற்றதாகி விடுகிறது.

இரண்டாவது வாக்கியத்தில் உள்ள ஆசிரியர் என்பது பெயர்ச் சொல். 'வா' என்பது வினைச் சொல். அழைத்தார் என்பதும் வினைச் சொல். '**என**' என்பது என்ன சொல்? 'என' என்னும் சொல்லை நீக்கினல், வாக்கியம் பொருள் தருகிறதா? இல்லை. எனவே '**என்று**' என்னும் சொல் **மதி** என்னும் **பெயர்ச் சொல்**லை அடுத்து நின்று வாக்கியத்தைப்பொருளுடையதாக்குகின்றது. **என** என்னும் சொல் **வா** என்னும் **வினைச் சொல்**லை அடுத்து நின்று வாக்கியத்தைப் பொருள் உடையதாக்குகின்றது. இவ்வாறு **பெயர்ச் சொல்லையும் வினைச் சொல்லையும் சார்ந்து நின்று, பொருளை உணர்த்தும் சொல் இடைச் சொல் எனப்படும்.** ஆனல் **இடைச் சொல் தனித்து நின்று பொருளை உணர்த்தாது என்பதை அறியவேண்டும்.**

**மனப்பாடம் செய்** ;

பெயர்ச் சொல் வினைச் சொற்களைச் சார்ந்து நின்று பொருள் தருவது இடைச் சொல் எனப்படும். அது தனித்து நின்று பொருள் தாராது.

இவற்றைப் படி :

1. கந்தனைக் கண்டேன். (கந்தன்+ஐ)
2. வாளால் வெட்டினன். (வாள்+ஆல்)
3. அவனுக்குக் கொடு. (அவன்+கு)
4. கல்வியில் பெரியவர் கம்பர். (கல்வி+இல்)
5. எனது பசு. (என்+அது)
6. ஊர்க்கண் இருந்தான். (ஊர்+கண்)
7. புலி போலப் பாய்ந்தான். (போல)

மேலே காட்டியுள்ள வாக்கியங்களில் வந்துள்ள ஐ, ஆல், கு, இல், அது, கண், போல என்பன இடைச் சொற்கள். இவை போன்ற இடைச் சொற்கள் பல உண்டு. அவற்றை மேல் வகுப்புக்களில் அறியலாம்.

### வினக்கள்

1. இடைச் சொல் என்ருல் என்ன ?
2. இடைச் சொல் என்று ஏன் பெயர் வந்தது ?

### பயிற்சி :

I கீழ்வருவனவற்றுள் உள்ள இடைச் சொற்களைத் தனியே எடுத்தெழுது :

1. பந்தை உதைத்தான்.
2. கல்லால் அடித்தான்.
3. வீட்டிற்குச் சென்ருேம்.
4. அவனு வரைந்தான் ?

5. பலகையை உடைத்தவன் அவனே.
6. இது அவனது புத்தகம்.
7. இப்பம்பரம் உடையாதோ?
8. சிங்கம்போலச் சண்டையிட்டான்.

**II கோடிட்ட இடங்களில் தக்க இடைச் சொற்களை அமைக்கவும் :**

1. அது அவ——வீடு.
2. நான் வீட்டில்—— வருகிறேன்.
3. நான் கண்ணப்ப—— ப் பார்த்தேன்.
4. இதை உடைத்தவன் கண்ண——.
5. முருகன் கண்ண—— ப் புத்தகம் கொடுத்தான்.
6. கண்ணன் என்னுடைய கன்னத்—— அறைந்தான்.
7. மணவாளன் தலை—— குட்டினுன்.
8. அவன் கண்ண—— பணம் கொடுப்பான்.
9. அவன் புதுத் தெரு—— இருக்கிறுன்.
10. கோவிந்தன் கொம்—— அடித்தான்.

## 9. உரிச் சொல்

**இவற்றைப் படி :**

1. சம்பந்தன் **சாலப்** பேசினுன்.
(சால=மிகுதி)
2. உண்மை சொன்னவன் **உறு** பொருள் பெற்றுன். (**உறு**=மிகுதி)

3. சண்முகம் **தவப்** படித்தவன்.
(தவ=மிகுதி)

4. நாராயணன் **நனி** பேதை.
(நனி=மிகுதி)

5. அது இருள்**கூர்** சிறு பாதை.
(கூர்=மிகுதி)

6. நான் **கழி** மகிழ்வு அடைந்தேன்.
(கழி=மிகுதி)

இவ்வாக்கியங்களில் வந்துள்ள **சால, உறு, தவ, நனி, கூர், கழி** என்னும் சொற்கள் ஒவ்வொன்றும் **மிகுதி** என்னும் பொருளைத் தருகின்றன. ஒவ்வொன்றும் ஒரு **தன்மையை** (பண்பை) உணர்த்துகிறது. இவ்வாறு **ஒரு பொருளுக்கு உரிய தன்மையை உணர்த்துவது உரிச் சொல் எனப்படும். (உரிய** பண்பை உணர்த்துவதால் **உரிச் சொல்.)**

**குறிப்பு :** மேலே உள்ள வாக்கியங்களில் வந்துள்ள உரிச் சொற்கள் **மிகுதி** என்னும் ஒரே பண்பைத் தெரிவிக்க வந்த பல சொற்கள். இவ்வாறு வாராமல், பல பண்புகளை உணர்த்த வரும் ஒரே உரிச் சொல்லும் உண்டு.

**இவற்றைப் படி :**

1. இது **கடி** நுனி வேல். (கடி=கூர்மை)
2. அவள் **கடி** மலர் கொய்தாள்.
(கடி=வாசனை)

3. அது **கடி** மதில் சூழ்ந்த கோட்டை.

(கடி = காவல்)

இவற்றில் வந்துள்ள **கடி** என்னும் ஒரே சொல் **கூர்மை, வாசனை, காவல்** என்னும் வெவ்வேறு பொருளை உணர்த்தி இருப்பதைக் கவனிக்கவும்.

**மனப்பாடம் செய் ;**

1. பொருளுக்கு உரிய பண்பை உணர்த்தும் சொல் உரிச் சொல் எனப்படும்.
2. உரிச் சொல் தனித்து நின்று பொருள் தருவதில்லை.

**வினாக்கள்**

1. உரிச் சொல் என்றால் என்ன ?
2. உரிச் சொற்கள் எத்தனை வகைப்படும் ?

# 10. வாக்கியம்

## எழுவாய், பயனிலை

### எழுவாய்

**இவற்றைப் படி :**

1. **கண்ணன்** காட்டிற்குச் சென்றான்.
2. **பசு** புல் மேய்கிறது.

இவை கருத்து முடிந்த சொற்றொடர்கள். ஆதலால் **வாக்கியங்கள்** என்பதை நீ அறிவாய். முதல் வாக்கியம் யாரைப்பற்றிக்

கூறுகிறது? கண்ணனைப்பற்றிக் கூறுகிறது. எனவே முதல் வாக்கியம் கண்ணனைப்பற்றி **எழுந்தது.**

இரண்டாம் வாக்கியம் **பசுவைப்** பற்றி எழுந்தது. இவற்றால் நாம் அறிவது யாது? **வாக்கியம் எழுவதற்குக் காரணமாக இருக்கும் சொல் எழுவாய்** என்பதை அறிதல் வேண்டும். (எழுவாய் = எழுகின்ற இடம். அதாவது, வாக்கியத்தின் **முதற்பொருள்** அல்லது **கர்த்தா.**)

## பயனிலை

**இவற்றைப் படி :**

1. கண்ணன் காட்டிற்குச் **சென்றான்.**
2. பசு புல் **மேய்கிறது.**

கண்ணன் என்ன செய்தான்? **சென்றான்.** '**சென்றான்**' என்னும் சொல் **கண்ணன்** என்னும் **எழுவாயின் செயலைக் காட்டுகிறது.**

பசு என்ன செய்கிறது? **மேய்கிறது.** எனவே '**மேய்கிறது**' என்னும் சொல் **பசு** என்னும் **எழுவாயின் செயலைக்காட்டுகிறது.**

இவற்றால் எழுவாயின் செயலைக் காட்டும் சொல்லே பயனிலை என்று அறிதல் வேண்டும்.

மனப்பாடம் செய்:

எழுவாயாவது வாக்கியத்தின் முதற் பொருள். பயனிலையாவது எழுவாயின் செயலைக் காட்டும் சொல்.

### வினாக்கள்

1. வாக்கியத்தின் இரு முக்கிய உறுப்புக்கள் எவை? அவை யாவை?
2. எழுவாய் என்றால் என்ன?
3. பயனிலை என்றால் என்ன?

### பயிற்சி

I கீழ் வருவனவற்றில் உள்ள எழுவாய் பயனிலைகளை எடுத்து எழுது:

1. இராமன் படித்தான்.
2. குதிரை ஓடிற்று.
3. புலியைக் கொன்றான்.
4. வசந்தன் வந்தான்.
5. ஆறு ஓடுகிறது.
6. நாங்கள் விளையாடுகிறோம்.
7. சந்திரன் மறைந்தான்.
8. சூரியன் உதித்தான்.
9. விளக்கு எரிகிறது.
10. புல் பசுமை நிறமானது.

# 11. நிறுத்தல் குறிகள்

## கேள்விக் குறி (?)

இவற்றைப் படி:

1. நீ படித்தாயா?
2. அவன் சாப்பிட்டானா?

3. உன் பெயர் என்ன ?

4. உன் வீடு எங்கே ?

ஒவ்வொரு வாக்கியமும் ஒவ்வொரு கேள்வியாக இருக்கிறது. ஒவ்வொன்றின் இறுதி (கடைசி)யிலும் [?] இக்குறி இருப்பதைக் கவனி. **இக்குறி கேள்விக்குறி எனப்படும்.** எனவே, கேள்வி வாக்கியங்களின் இறுதியில் கேள்விக் குறி இடவேண்டும் என்பதை மறவாதே.

### பயிற்சி

**I கேள்வி வாக்கியங்களைப் பொறுக்கிக் கேள்விக் குறி இடு:**

1. கடல் நீர் எப்படி இருக்கும்.
2. கடல் நீர் உப்பாய் இருக்குமா.
3. சீதை இராமனுடைய மனைவியா.
4. உன் புத்தகம் எங்கே.
5. எல்லப்பன் ஏழை.
6. நாகப்பன் நல்லவனா.
7. குமரப்பன் கெட்டிக்காரன்.
8. நீ நேற்று வரவில்லையா.
9. கண்ணப்பன் எப்பொழுது வருவான்.
10. பால் வெண்மை நிறமானது.

## எடுத்துக்காட்டுக் குறி (“ ”)

**இவற்றைப் படி :**

1. அவ்வையார் “ அறம் செய விரும்பு,” என்று கூறினார்.

2. பாரதியார் "காலை எழுந்த உடன் படிப்பு," என்று கூறினார்.

முதல் வாக்கியத்தில் அவ்வையார் கூறிய சொற்களை **எடுத்துக் காட்ட** [" "] இக்குறிகள் இடப்பட்டுள்ளன. இரண்டாவது வாக்கியத்தில் பாரதியார் கூறிய சொற்களை **எடுத்துக் காட்ட** [" "] இக் குறிகள் இடப்பட்டுள்ளன. ஒருவர் கூறியதை அப்படியே எடுத்துக் காட்ட இக்குறிகள் உபயோகப் படுவதால், இவை **எடுத்துக்காட்டுக் குறி** எனப்படும்.

ஒருவர் கூறியதைப் பிறர்க்கு அப்படியே எடுத்துக் காட்ட உபயோகிக்க வேண்டிய குறிக்கு எடுத்துக் காட்டுக் குறி என்பது பெயர்.

### பயிற்சி :

**கீழ்வந்துள்ள வாக்கியங்களில் ஏற்ற இடத்தில் எடுத்துக் காட்டுக் குறி இடுக :**

1. என்னை ஆசிரியர் இங்கே வா என்று கூப்பிட்டார்.

2. தந்தையார் நான் நாளை வேலூருக்குப் போகிறேன் என்று கூறினார்.

3. எல்லப்பன் எனக்காகக் காத்திரு. நான் உன்னை உன் வீட்டில் சந்திக்கிறேன் என்று கூறினான்.

4. கந்தன் கண்ணனைக் கண்டேன் என்று சொன்னான்.

5. நான் வீட்டுக்கு வா. சோறு போடுகிறேன் என்று சொல்லிப் பிச்சைக்காரனைக் கூப்பிட்டேன்.

## வியப்புக் குறி [!]

**இவற்றைப் படி :**

1. ஆ! என்ன துணிச்சல்! உயிருள்ள பாம்பைப் பிடித்தானே!
2. ஆ! மாங் கொட்டையைச் செடி ஆக்கி விட்டானே!

மேலே உள்ள இரண்டு வாக்கியங்களின் இறுதியில் [!] இக்குறிகள் இருப்பதைக் கவனி. [!] இக்குறிக்கு **ஆச்சரியக் குறி** அல்லது **வியப்புக் குறி** என்பது பெயர். செய்ய முடியாத ஒன்றைச் செய்து காட்டினால், நீ என்ன செய்வாய்? ஆச்சரியப்படுவாய் அல்லவா? மனிதனால் பறக்க முடியாது. அவன் பறந்தால் என்ன செய்வாய். 'ஆ' என்று கூறி ஆச்சரியப்படுவாய். அத்தகைய ஆச்சரிய நிகழ்ச்சிகளை வாக்கியங்களில் குறிக்க உதவுவது இக்குறியே ஆகும். ஆச்சரிய நிகழ்ச்சிகளைத் தெரிவிக்கும் சொல்லின் அல்லது வாக்கியத்தின் இறுதியில் [!] இந்தக் குறியை இடவேண்டும்.

## பயிற்சி :

கீழ் வரும் வாக்கியங்களுக்கு ஏற்ற இடத்தில் வியப்புக் குறி இடுக :

1. ஓ ஓ உயர்ந்த மரம் உருவினுல் பிடி காணுது
2. உன்னைக் கண்டு நெடுநாட்களாயின வருக வருக
3. அப்பா காலில் கல் அடித்தது
4. ஆ ஆ எவ்வளவு அழகான கோபுரம்
5. ஏ அப்பா அவன் எவ்வளவு தடித்திருக்கிறுன்

---

★

# TAMIL GRAMMAR

(FOURTH & FIFTH STANDARDS)

*By*

**T. S. UMAPATHY, M. A., L. T.**

*Price As. 5/-*

ASSOCIATION PUBLISHING HOUSE,

MADRAS—1.

1954

---

Printed at the Venkatesan Press, Madras—1.